

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (24.10.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மயிலாடுதுறை மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த மயிலாடுதுறை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எம்.எஸ்.பிரேம்குமார் மற்றும் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைத் தலைவர் கண்ணன் (எ) ஜி.சுப்ரமணியன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர். அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., மயிலாடுதுறை மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞானவேலன், செல்வமணி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், அரசு முன்னாள் வழக்கறிஞர் ராமசேயோன், விவசாய அணி பரிதி ஆகியோர் உடனிருந்தனர்.

ஊழல் பற்றி வீரவசனம் பேசிய விஜய்!

அரசு அலுவலகங்களில் ரூ.1.59 கோடி பறிமுதல்!

லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை!

சென்னை, அக்.25-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 43 அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப் புத்துறை சோதனை நடத்தினர். இந்த சோதனை யில் கணக்கில் வராத ரூ.1,59,18,031 பறிமுதல் செய்யப்பட்டது. தமிழக அரசின் கீழ் வருவாய், நக ராட்சி, பத்திரப்பதிவு, நிர்வாக, வட்டார போக்குவ ரத்து என 36 துறைகள் உள்ளது. இதில் அரசுக்கு நேரடி வருவாய் தரும் துறைகளில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் முதல் கடை நிலை ஊழியர்கள் வரை பொதுமக்களிடம் இருந்து அதிகளவில் லஞ்சம் பணம் பெறுவதாக தொடர் புகார்கள் எழுந்தது.

அதைதொடர்ந்து துறை வாரியாக லஞ்ச ஒழிப் புத்துறை அதிகாரிகள் அரசு துறை அலுவலகங்க ளில் அதிரடி சோதனை நடத்தில் கணக்கில் வராத பல லட்சம் பணம் பறிமுதல் செய்து வருகின்றனர்.

தற்போது டிஜிட்டல் பரிவர்த்தனை அதிகளவில் இருந்ததால் அரசு அதிகாரிகள் ஜிபே மூலம் பணம் பெற்று வருவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டினர். இதனால் அரசு அதிகாரிகள் பயன்படுத்தும் ஜிபே, போன் பே உள்ளிட்ட டிஜிட்டல் பரிவர்த்தனைகளையும் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி பணம் பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தீபாவளி பண்டிகையை முன் னிட்டு அரசு துறைகளில் அதிகளவில் பணம் நட மாட்டம் இருப்பதாக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் கள் வந்தது. அதைதொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் பிரேம் ஆனந்த் சின்கா உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் உள்ள 43 அரசு அலுவலகங் களில் ஒரே நேரத்தில் மாவட்ட வாரியாக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.8,21,750 கைப்பற்றப்பட்டது மற்றும் ஜிபே பரிவர்த்தனைகள் மூலம் ரூ.1,50,96,281 கண்டறியப்பட்டது. அதன்படி கணக்கில் வராத மொத்தம் ரூ.1,59,18,031 பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

விவசாயக் கடன் தள்ளுபடி தொடர்பாக

அமைச்சர்கள் முன்னிலையில் விவசாயிகள் கடும் மோதல்!

தலைமைச் செயலகத்தில் பரபரப்பு!

சென்னை, அக்.25-

விவசாயக் கடன் தள்ளு படி தொடர் பாக அமைச் சர்கள் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விவசாயிகள் மோதிக் கொண்ட சம்பவம் தலைமைச் செயலகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

விவசாயக்கடன் தள்ளு படி தொடர்பாக விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளு டன் தமிழ் நாடு அரசு சார்பில் அமைச் சர்கள் ஆலோசனைக் கூட் டம் தலைமைச் செய லகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங் கோட்டையன், வினோத், காந்திராஜ், ரமேஷ் மற்றும் அரசு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் சார்பில் வேட்டவலம் மணிகண் டன் (தமிழ்நாடு விவசாயி கள் சங்கம்), அய்யாகண்ணு (தேசிய தென்னிந்திய நதி கள் சங் கம்), பி.ஆர்.பாண் டியன் (காவிரி விவசாயிகள் சங்கம்). ஈசன் (விவசாயி கள் பாதுகாப்பு சங்கம்). வார ணாசி ராஜேந்திரன் (ஷிபா தலைவர்), விஜய குமார் (சிறுதானிய பயிர் கள் சங் கம்), தனபால் (தஞ் சாவூர் காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம்) உள் ளிட்ட 50க்கும் மேற்பட்ட விவசாய சங்க தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியது முதல் ஒவ்வொரு விவசாய சங்க பிரதிநிதிகளும், விவ சாய கடன் தள்ளுபடி குறித்த தங்களது கருத்துக் களை பதிவு செய்து வந்த னர். அப்போது குறுக்கீடு செய்த பி.ஆர். பாண்டியன் எழுந்து சில கருத்துக்களை கூறினார். இதில் ஒரு கட் டத்தில் விவசாய சங்க தலைவர் அய்யாகண்ணு பேசும்போது, சில கருத்துக் களை தெரிவித்தார்.

அப்பொழுது அவர் சற்று கோபமாகவும், சத்தமாக வும் பேசிவிட்டு அமர்ந் தார்.

பின்னர் கூட்டம் இறுதிக் கட்டத்திற்கு வரும் நேரத் தில் தமிழக விவசாயிகள் சங்க தலைவரும், மூத்த விவசாய சங்க தலைவரு மான வேட்டவலம் மணி கண்டன் பேச முற்பட்டார். அப்போது, பி.ஆர்.பாண்டி யன் குறுக்கிட்டார்.உடனே வேட்டவலம் மணிகண் டன் சற்று கோபமாக பி. ஆர்.பாண்டியனை பார்த்து எச்சரிக்கும் விதமாக கடு மையாக பேசி அமர சொன்னார்.

அமைச்சர்கள் முன்னி லையில் விவசாய சங்கத் தலைவர்கள் ஒருவருக்கொ ருவர் மோதிக் கொண்ட தால் கூட்டத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

கூட்டம் முடிந்த பின்னர் தமிழ்நாடு விவசாய சங்க தலைவர் வேட்டவலம் மணிகண்டன் கூறியதாவது:

பி.ஆர்.பாண்டியன் கூட் டம் ஆரம்பித்தது முதல் அர சின் கூட்டுறவு துறை செய லாளர் போல்தான தோன்றித்தனமாக கருத்துக் களை தெரிவித்தார். குறிப் பாக, கடந்த தி.மு.க. மற் றும் அ.தி.மு.க. ஆட்சி நடந்தபோது, அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டவர் தான் பி.ஆர்.பாண்டியன். ஆனால் இந்த கூட்டத்தில் பங்கேற்ற அவர், இரண்டு கட்சிகளையும் தரக்குறை வாக பேசியதுடன், தற்போ தைய ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு ஆதரவாக பேசினார். அவரது நட வடிக்கை அனைவரையும் முகம் சுழிக்க வைத்தது.

இனிவரும் காலங்களில் பி.ஆர்.பாண்டியனை இது போன்ற அனைத்து விவசா யிகள் சங்கங்கள் பங்கேற் கும் கூட்டத்தில் பங்கேற்க அரசு அழைக்கக்கூடாது என்றார்.

இந்த கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, 'விவசாயக் கடன் தள்ளுபடி எந்த நிபந்தனையும் இல்லா மல் ரூ.75 ஆயிரம் வரை தள் ளுபடி செய்யப்படும் என்று கூறியதாக விவசாய சங்கத் தலைவர்கள் கூறினர். அது வும் 1.5.2025 முதல் 31.3. 2026 வரை இது செயல்ப டுத்த அரசு திட்டமிட்டுள்ள தாக கூறப்படுகிறது. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ள னர். அதேபோன்று குடும் பத்துக்கு ஒருவருக்குத்தான் என்ற நிபந்தனையும் தளர்த்த வேண்டும் என்று அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர், என்றார்.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., தலைமை கழக பிரதிநிதி சி.வி.எம்.பி.எழிலரசன், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., கோ.கண்ணன், இரா.ராஜசேகர், எஸ்.அம்பேத்குமார்.எம்.எல்.ஏ., ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஆர்.வேல்முருகன், ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சிணாமூர்த்தி, பிரியா. விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், ஜெயராணிரவி, ஒ.ஜோதி, ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

இதுதான் த.வெ.க. அரசின் வெளிப்படைத் தன்மையா?

சென்னை, அக்.25-

தமிழக அரசின் இணையதளம், 'அப்டேட்' செய் யப்படாமல் இயங்குவதால்,பார்வையிடும் பொது மக் கள் அதிர்ச்சிக்கு ஆளாகின்றனர்.

தமிழக அரசுக்கு, tn.gov.in என்ற இணையதளம் உள்ளது. தேசிய தகவலியல் மையம் வாயிலாக, இந்த இணையதளம் பராமரிக்கப்படுகிறது. அமைச்ச ரவை, அரசு துறைகள், துறை தலைமை அலுவல கங்கள், மாவட்ட கலெக்டர்கள் உள்ளிட்ட தகவல்கள் இடம்பெற்று உள்ளன.

சட்டசபையில் அரசின் பட்ஜெட் அறிவிப்புகள், கொள்கை விளக்க குறிப்புகள், துறை வாரியாக அமைச்சர்களின் அறிவிப்புகள் உள்ளிட்டவையும் இடம்பெற்று இருக்கும். இது மட்டுமின்றி, நாள் தோறும் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற் கும் கூட்டங்கள் தொடர்பான செய்திகள், புகைப்படங்களும் பதிவேற்றம் செய்யப்படும்.

அரசாணைகளும் பதிவேற்றம் செய்யப்படும். இதை பார்த்து, அரசின் செயல்பாடுகளை பலரும் தெரிந்து கொள்வர். திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்த தற்கான ஆதாரமாக அவை இருக்கும். ஆனால், கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக, தமிழக அர சின் இணையதளம் முறையாக இயங்கவில்லை. பல தகவல்கள் புதுப்பிக்கப்படாமல் உள்ளன. வேளாண் துறை செயலராக இருந்த சங்கர் மாற்றப் பட்டு,மாதங்கள் ஆகி விட்டன. ஆனால், வேளாண் துறை செயலராக அவர் பணியில் இருப்பதாக, இணையதளத்தில் உள்ளது.

த.வெ.க, அரசு வெளிப்படை தன்மையுடன் இயங் கும் என, பங்கேற்கும் கூட்டங்களில் எல்லாம் முதல்வர் விஜய் கூறி வருகிறார். சட்டசபையில் பட் ஜெட் மற்றும் மானிய கோரிக்கை தாக்கலுக்கு பின், பல துறைகள் வாயிலாக திட்டங்களை நிறைவேற்றும் வகையில், அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பல்வேறு வாரியங்கள், தீர்ப்பாயம், ஆணையம் உள்ளிட்டவற்றிற்கு புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். ஆனால், இது குறித்த தகவல்கள், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவது இல்லை.

பல தகவல்கள் ரகசியமாகவே கையாளப்பட்டு வரு கின்றன. அரசின் செயல்பாடுகள் வெளிப்படை தன் மையுடன் இல்லாததால், இணையதளத்தை பார் வையிடும் பொது மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். அரசு தலைமையின் அனுமதி கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால், தொடர்புடைய துறைகளில் இருந்து அரசாணை குறித்த விபரங்கள், முறையாக தேசிய தகவலியல் மையத்திற்கு அனுப் பப்படுவதில்லை என, இதற்கு காரணம் கூறப்படுகிறது.

பெரியார், அண்ணா, கலைஞர், மு.க.ஸ்டாலின் பண்படுத்திய

தமிழ் மண்ணில் சாதிய ஒடுக்குமுறையா? மாவட்டக் கழகம் கண்டனம்!

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, அக்.25-

தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா, முத்தமிழறி ஞர் கலைஞர், கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் ஆகி யோரின் உழைப்பால், தியா கத்தால் பண்படுத்தப்பட்ட தமிழ் மண்ணில் சாதிய ஒடுக்குமுறையா? என தவெக அரசைக் கண்டித்து கண்டனத் தீர்மானம் உட் பட பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற் குழு கூட்டத்தில் நிறைவேற் றப்பட்டது.

தீர்மானங்களை விளக்கி, முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், சட்ட மன்ற தி.மு.க. கொறடாவு மான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

24.10.2026 சனிக்கிழமை மாவட்ட தி.மு.க. அலுவல கத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

முன்னாள் சட்டப்பே ரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம். எஸ்.தரணிவேந்தன். எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. ராஜசேகர் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

முன்னதாக தலைமைக் கழக பிரதிநிதி சி.வி.எம். பி.எழிலரசன் கருத்துக்கள் வழங்கி உரையாற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், சட்டமன்ற திமுக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மா னங்களை விளக்கி சிறப்பு ரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இரங்கல் தீர்மானம்

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத் தூர் சட்டமன்றத் தொகுதி, முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் எஸ்.பெரிய வேடி அவர்களின் மறைவிற் கும், திருவண்ணாமலை ஒன்றிய முன்னாள் ஒன்றிய பொருளாளர் பழையனூர் அப்பாவு அவர்களின் மறை விற்கும், தி.மலை கிழக்கு ஒன்றிய மாவட்ட பிரதிநிதி நல்லூர் பழனி அவர்களின் மறைவிற்கும், வெம்பாக்கம் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் கே.கஜேந்திரன் அவர்களின் மறைவிற்கும் இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித் துக் கொள்கிறது.

மக்களின் அத்தியாவசி யத் தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் உள் ளிட்ட பொருட்கள் பல மடங்கு உயர்வால் மக்கள் அவதிப்படுவதும், நியாய விலைக்கடைகளில் சன்ன ரக அரிசி வழங்கி, அதை மக் கள் வேண்டாம் என்கிற அவல நிலை உருவாகி உள் ளது. தவெக அரசு உடனடி யாக விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி, மக்களின் துயரை துடைக்க வேண்டு மென இந்த மாவட்டக் கழ கம் கேட்டுக் கொள்கிறது.



பெரியார் அறிவுலகம் கழகத் தலைவருக்கு நன்றி!

தற்போது கோவையில் தவெக அரசின் முதலமைச் சர் திறந்து வைத்த பெரியார் அறிவுலகம், திராவிட மாடல் அரசின் அற்புத சாதனை. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிந்தனையில் தோன்றி, அவ ரின் பெருமுயற்சியால் நவீன கட்டமைப்புடன் பெரியார் அறிவுலகம் அமைக்கப்பட்டது. அவ ருக்கு உறுதுணையாக முன் னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், பெரியார் அறிவுலகம் சிறப்பாக அமைந்திட அயராது உழைத்திட்ட அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும் இந்த மாவட்டக் கழகம் நன்றியினையும், பாராட்டு தலையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் சட்டம்ஒ ழுங்கு கட்டுப்படுத்த முடி யாத அளவிற்கு சீரழிந்து போய் உள்ளது. தினசரி கொலை, கொள்ளை, பாலி யல் வன்முறை, போதை கலாச்சாரங்கள் நடைபெறு கிறது. செஞ்சி, ஆலம்பூண் டியில் காணாமல் போன 7வயது குழந்தை, இரு வாரங்கள் கடந்தும் தற் போது வரை கண்டுபிடிக்க முடியாத அவல நிலையில் தவெக அரசு மொத்தப் போக்கில் தமிழகத்தை நடத்தி வருவதை இந்த மாவட்ட கழகம் வன்மை யாக கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் போதைக் கலாச்சாரம் தலைவிரித்தா டுகிறது. நாகை மாவட்ட தவெக செயற்குழு உறுப்பி னர் பூபாலன் வீட்டில் 135கிலோ மெத்தபெட்ட மையின் கைப்பற்றப்பட்டி ருக்கிறது. சர்வதேச போதைக் கும்பலுடன் தவெக நிர்வாகி தொடர் பில் உள்ளது குறித்து இந்த மாவட்ட கழகம் த.வெ.க. அரசை வன்மையாக கண் டிக்கிறது.

கோவை வீளமேடு பகுதி, அரசு உதவிபெறும் பள்ளி யில் படித்துவந்த அகிலன் என்கிற மாணவர் சாதிய ஒடுக்குமுறைக் காரணமாக தற்கொலை செய்து கொண்ட செய்தியைக் கேட்டு, இந்த மாவட்டக் கழகம் அதிர்ச்சியடைகிறது.

தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா, தலைவர் கலைஞர், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் இவர்களின் உழைப்பால், தியாகத்தால் பண்படுத்தப் பட்ட தமிழகத்தை நாளுக்கு நாள் சீர்குலைக் கும் த.வெ.க. அரசைக் வன் மையாக கண்டிக்கிறது.

பருவமழை : நிவாரண உதவி!

தமிழ்நாட்டில் வடகி ழக்கு பருவ மழையை யொட்டி, தீவிர மழைப் பொழிவையொட்டி, திரு வண்ணாமலை மாவட்டத் தில் ஆங்காங்கே ஏற்படும் பாதிப்புகளில் கழக நிர்வா கிகளும், தோழர்களும் கலந்து கொண்டு, ஒத்து ழைப்பு நல்கியும், மக்க ளுக்கு நிவாரண உதவிகள் வழங்கிடவும் இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

வேளாண் விற்பனை கூடங்களில் (Marketing Com mittee)அரசின் நிர்வாக குள றுபடிகளால் விவசாயி களும், நெல் வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளனர். நெல் ஏலம் எடுத்த வியாபாரிகள், பணத்தை செலுத்தினாலும், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் அவை கிடைப்ப தில் பெரும சிரமம் ஏற்படு கிறது. இந்த பிரச்சனை களால் தொடர்ந்து நெல் வியாபாரிகள் ஏலம் எடுப் பதை ஒட்டு மொத்தமாக தவிர்த்து வருகின்றனர்.

நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கும் இந்த நேரத்தில் விவசாயிகள் தாங் கள் கஷ்டப்பட்டு விளை வித்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல் தவிர்க் கின்றனர். நம்மை வாழ வைக்கும் விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் கிடைத்திட த.வெ.க. அரசு உடனடி யாக இந்த பிரச்சனையில் தலையிட்டு தீர்வு கிடைக்க ஆவனம் செய்ய இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங் கள் ஒருமனதாக நிறைவேற் றப்பட்டது.

கூட்டத்தில் கழக மருத்து வரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப் பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்கு மார், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் மு. பெ.கிரி, பெ.சு.தி.சர வணன், ஒ.ஜோதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், ஆர்.வேல் முருகன், மாவட்ட பொரு ளாளர் எஸ்.பன்னீர்செல் வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜய ரங்கன், விஜயலட் சுமி ரமேஷ், மாநில தொ. மு.ச., பேரவைச் துணைத் தலைவர், க.சௌந்தரராசன் அனைத்து அமைப்புசாரா ஏ.ஏ.ஆறுமுகம்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன் க.லோக நாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, முன் னாள் சட்டமன்ற உறுப்பி னர் கே.வி.சேகரன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர் கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபா கரன், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, சி.ராம்காந்த், பச் சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பால மு ர ளி கி ரு ஷ் ண ா , ஏ.டபள்யு.சார்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், எல்.ஐ.சி. து.வேலு, இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர்.அன்ப ரசு, கற்பகம்சரவணன், உ.நித்யா, என்.மாசிலா மணி, நகர செயலாளர் மு.அன்பழகன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் கள் எவரெஸ்ட் ந.நரேஷ்கு மார், இ.எஸ்.டி.கார்த்திகே யன், கோ.எதிரொலிமணி யன், ஏ.எம்.சம்பத், மா.ஏழு மலை, என்.கே.ஏ.பாபு, அ.மணிகண்டன், டாக்டர் மகேந்திரன், க.சீனுவாசன், பி.செல்வராஜன்,

ஜி.பி.அசோக், இ.மணி கண்டன், தொ.ப.சீ.மதிவா ணன், சாது.ஆனந்த், ப.க.மணிவண்ணன், ஆர். ராம்ரவி, சுந்தர்.கருணாநிதி, இப்ராஹிம் (எ) அமர்ஷெ ரீப், கே.ஏ.புஷ்பராஜ், மாலி னி வி னோ த் தி வா க ரன், இ ரா ணி வெங்க டே சன், அப்சல்பாஷா, ஐ.எஸ்.அமா னுல்லா.

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் கே.விஸ்வ நாதன், ஏ.தயாளன், கோ.தனசேகர், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலா ளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தரபாண்டி யன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந் தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிர மணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த. மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன் றிய செயலாளர்கள் பி.மனோகரன், ஏ.எழில் மாறன், என்.டி.மனோகரன், ய எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி. திராவிட முருகன், சி.கே. ரவிக்குமார், கே.பி.ஆர். பி.பழனி, சி.ஆர்.பெரு மாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், கே.டி.ராமசாமி, சு.ராஜ் குமார், இரா.மகேஷ்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் கள் நா.பழனி, து.கென் னடி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கு.பாலசுப்பி ரமணி, கா.சு.இளங்கோ வன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக் குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம். காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர். வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்த குமார், அப்சர்லியாகத் பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலா ளர்கள் சி.கே.அன்பு, ப.முரு கையன், எம்.சீனுவாசன், ஆர்.முருகன், வி.வெங்கடே சன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணி ஏழுமலை, திருவண்ணா மலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந் தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் உட் பட சிறப்பு அழைப்பாளர் கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர செய லாளர் ப.கார்த்திவேல் மாறன் நன்றி கூறினார்.